**தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபை - 2022**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக சபையின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பாதகமான அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் பந்தி 48 இன் பிரகாரம் தேவைப்படுகின்ற அல்லது அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன ஈடுசெய்யப்படக்கூடாத போதிலும், புத்தக விற்பனை நிலையத்தின் விற்பனைக் கிரயத்தை கணக்கிடும் போது, வருடத்தின் கொள்வனவு பெறுமதியான ரூபா 765,883 விற்பனையிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. | இது தொடர்பில் விடயங்களை ஆராய்ந்து, தேவையான கணக்கீட்டு சீராக்கத்தை 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | வருமானம் மற்றும் செலவினங்களை தனித்தனியாக இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ரூபா 3,250,000 பெறுமதியான மூலதன மானியங்கள், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11 இன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டு முதல் அவற்றை வருமானமாக | கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக, வருடத்திற்குரிய வருமானத்தை சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கம் 11 இன் பிரகாரம், அவ்வருடத்தின் வருமானமாக அங்கீகரிக்கப்படாமல், நிதி நிலைமைக் கூற்றில் மூலதன மானியங்களாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தன. | இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது | இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கொள்வனவு கிரயம் ரூபா 2,726,001 ஆக அமைந்த kiyawamu.lk இணையத்தளம் மற்றும் அபிவிருத்திச் செலவினம் ரூபா 10,397,391 ஆக அமைந்த டிஜிட்டல் தொகுப்பு மென்பொருள் ஆகியவை, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் 26 ஆம் பந்தியின் பிரகாரம், அருவச் சொத்துக்களின் கீழ் காட்டப்படாமல், ஏனைய நடைமுறையல்லாத அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | ரூபா 2,726,001 கிரயமான kiyawamu.lk இணையத்தளம் மற்றும் ரூபா 10,397,391 கிரயமான டிஜிட்டல் தொகுப்பு ஆகியவற்றை அருவச் சொத்துக்களின் கீழ் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரைவிலக்கணங்களுக்கு அமைவாக, கட்புலச் மற்றும் அருவச் சொத்துக்களை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுகளின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சபையினால் நடத்தப்பட்டு வந்த புத்தக விற்பனை நிலையத்தில் ரூபா 2,117,895 பெறுமதியான வர்த்தக நட்டம் பதிவாகியிருந்ததுடன், கணக்காய்வுப் பரிசோதனையின் போது, அது கணக்கிடப்பட்ட விதம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | சபையினால் நடத்தப்பட்டு வரும் புத்தக விற்பனை நிலையத்தில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று இறுதித் இருப்பு ரூபா 2,819,907 ஆக இருந்தபோதிலும், விற்பனைச் செலவை கணக்கிடும் போது ஆரம்ப இருப்பு ரூபா 3,444,503 ஆக சரிசெய்யப்பட்டதன் காரணமாக, விற்பனைச் செலவும் வருடத்திற்கான பற்றாக்குறையும் ரூபா 624,596 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தன. | விற்பனை விலையில் கணக்கிடப்பட்டிருந்த புத்தகத் இருப்பை கிரயத்தில் இனங்கண்டு, தேவையான திருத்தத்தை 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் முந்தைய வருட சீராக்கங்களின் கீழ் கணக்கில் பதிவு செய்து முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | இருப்பானது கிரயம் அல்லது தேறிய பெறுமானம் ஆகிய இரண்டில் குறைவான பெறுமானத்தில் மதிப்பிடப்பட்டு கணக்கில் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று புத்தக விற்பனை நிலையத்தின் இறுதி இருப்பு | இது தொடர்பில் மேலும் விடயங்களை ஆராய்ந்து, தேவையான கணக்கீட்டுத் | இருப்பை சரியாகக் கணக்கிடுவதற்கும் மதிப்பிடுவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுப் பரிசோதனையின்படி ரூபா 934,696 ஆக இருந்தபோதிலும், வியாபாரக் கணக்கில் இறுதி இருப்பு ரூபா 1,104,161 ஆகக் கணக்கிடப்பட்டதன் காரணமாக, விற்பனைச் செலவும் வருடத்திற்கான பற்றாக்குறையும் ரூபா 169,465 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. மேலும், குறித்த இருப்பு நிதி நிலைமைக்கூற்றில் ரூபா 479,565 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக, நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 455,131 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | திருத்தத்தை 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | புத்தக விற்பனை நிலையத்தின் இலக்கியப் படைப்புகள் மற்றும் வெளியீடுகளை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட வருமானமான ரூபா 1,153,672, வியாபாரக் கணக்கில் சீராக்கப்படாது, ஏனைய வருமானமாகக் காட்டப்பட்டதன் காரணமாக, வியாபார நட்டம் குறித்த தொகையினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | இது தொடர்பில் மேலும் விடயங்களை ஆராய்ந்து, தேவையான கணக்கீட்டுத் திருத்தத்தை 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வியாபார இலாபம் / நட்டத்தை கணக்கிடும் போது, புத்தக விற்பனை வருமானம் வியாபாரக் கணக்கில் விற்பனை வருமானமாகக் காட்டப்பட வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டின் விற்பனை நிலையத்தினால் விற்பனைக்குப் பின்னர் பணம் செலுத்தும் அடிப்படையில் வெளிப்புற எழுத்தாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 362,423 பெறுமதியான புத்தகத் இருப்பானது, கொள்வனவாகவும் கடன் கொடுத்தோர் கணக்கில் பதிவு செய்யப்படாமல், இறுதி இருப்பு ஆக மாத்திரம் கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | இது தொடர்பில் மேலும் விடயங்களை ஆராய்ந்து, தேவையான கணக்கீட்டுத் திருத்தத்தை 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தெரிவு செய்யப்பட்ட கணக்கீட்டு நடைமுறைக்கு அமைவாக, சரியானதும் முழுமையானதுமான இரட்டைப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டில் புத்தகங்களை விற்பனை செய்த பின்னர் எழுத்தாளர்களுக்கு செலுத்தப்பட்ட பணம், விற்பனைக் கணக்கில் வரவு வைத்து பதிவு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக, மீளாய்வாண்டில் புத்தகங்களை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட உண்மையான வருமானமான | இது தொடர்பில் மேலும் விடயங்களை ஆராய்ந்து, தேவையான கணக்கீட்டுத் திருத்தத்தை 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடன் கொடுத்தோருக்கு பணம் செலுத்துதல் விற்பனைக் கணக்கின் மூலம் மேற்கொள்ளப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 868,273, நிதி கூற்றுக்களில் ரூபா 313,739 ஆகக் காட்டப்பட்டிருந்ததால், விற்பனை ரூபா 554,534 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்பட்ட நூலக எழுதுபொருட்களின் ரூபா 211,349 பெறுமதியான கிரயத் தொகை, சபையின் நூலக எழுதுபொருட்கள் இருப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததன் காரணமாக, சபையின் நூலக எழுதுபொருட்கள் இருப்பு குறித்த தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | இது தொடர்பில் மேலும் விடயங்களை ஆராய்ந்து, தேவையான கணக்கீட்டுத் திருத்தத்தை 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு அமைவாக இரட்டைப் பதிவுகளை சரியாக இனங்கண்டு கணக்கில் பதிவு செய்ய வேண்டும். |
| (இ) | சட்டபூர்வமான வைப்புகள், நன்கொடைகள், கொள்வனவுகள், பரிமாற்றச் சேவைகள் போன்ற பல்வேறு வழிகளில் சபைக்கு கிடைத்த புத்தகத் தொகுப்பில் ரூபா 115,165,111 பெறுமதியானவை மாத்திரமே, அதாவது கொள்வனவுகள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் கிடைத்த நன்கொடைகளில் ஒரு பகுதி மாத்திரமே நிதிக்கூற்றுகளில் நிலையான சொத்துக்களாக உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும், பெறுமதி இனங்காணப்படாத புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் மேலும் சபையிடம் காணப்பட்ட போதிலும், அப்புத்தகங்களின் பெறுமதியை அளவிட்டு கணக்கில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக, சபைக்குச் சொந்தமான மொத்தப் புத்தகங்களின் பெறுமதியின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. | KOHA நூலக முகாமைத்துவ மென்பொருள் தொகுதியில் இதுவரை இனங்காணப்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் முதலாவது கட்டமாக, இதுவரை KOHA தரவுத்தளத்தில் உள்ளிடப்படாத பழைய வெளியீடுகளை துரிதமாக தரவுத்தளத்தில் உள்ளிடுவதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அனைத்து வகைகளிலும் பெறப்படும் நன்கொடைகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், அத்துடன் கணினிகள் மற்றும் கணினி உபகரணங்களுக்கான 2022 ஆம் வருடத்திற்குரிய பெறுமானத்தேய்வுத் தொகை முறையே ரூபா 27,135 மற்றும் ரூபா 294,788 ஆக இருந்த போதிலும், நிதி கூற்றுகளின்படி அவை முறையே ரூபா 24,446 மற்றும் ரூபா 185,749 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக, வருடத்திற்கான | இது தொடர்பில் மேலும் பரிசோதனை செய்து, தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், அத்துடன் கணினி உபகரணங்கள் தொடர்பான வருடாந்த பெறுமானத்தேய்வினை 2023 ஆம் வருடத்திற்காக சரியாகக் கணக்கில் பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த பெறுமானத்தேய்வுக் கணக்கீட்டுக் கொள்கைக்கு அமைவாக, பெறுமானத்தேய்வு சரியாகக் கணக்கிடப்பட்டு கணக்கில் பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பற்றாக்குறையும் நிலையான சொத்துக்களும் ரூபா 111,728 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தன. | | |
| (உ) | மீளாய்வாண்டில் சேவைகளை வழங்கியதற்காக நேரடியாக வங்கியில் பெறப்பட்ட ரூபா 136,161, வருமானத்தின் மூலத்தின் அடிப்படையில் வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக, வருடத்திற்கான பற்றாக்குறை குறித்த தொகையினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | வங்கியில் பெறப்பட்ட இந்த நேரடி வைப்புத் தொகையான ரூபா 136,161 ஆனது 2023 ஆம் வருடத்திற்கான இறுதிக் கணக்குகளுக்காக இனங்காணப்பட்டு வருமானமாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | காலப்பகுதிக்குரிய முழுமையானதும் சரியானதுமான வருமானத்தை இனங்கண்டு கணக்கில் பதிவு செய்ய வேண்டும். |
| (ஊ) | வெளிநாட்டு மானிய செயற்திட்டங்கள் 03 தொடர்பில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 454,429 பெறுமதியான திரட்டிய செலவுகள் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கு சமமான தொகை மானியக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்படாததன் காரணமாக, வருடத்திற்கான வருமானம் குறித்த தொகையினால் குறைவாகவும், மானியக் கணக்கின் மீதி குறித்த தொகையினால் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது. | வெளிநாட்டு செயற்திட்டங்கள் 03 தொடர்பான ரூபா 454,429 பெறுமதியான திரட்டிய செலவுகள் தொடர்பில் மேலும் பரிசோதனை செய்து, தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | காலப்பகுதிக்குரிய முழுமையானதும் சரியானதுமான வருமானத்தை இனங்கண்டு கணக்கில் பதிவு செய்ய வேண்டும். |
| (எ) | வெளிநாட்டு மானிய செயற்திட்டமொன்றின் கீழ், மீளாய்வாண்டில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 125,000 பெறுமதியான செலவுகள், குறித்த செயற்திட்ட மானியக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக, சபையின் மாநாடுகள், விரிவுரைகள் மற்றும் பயிற்சி செலவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதன் காரணமாக, வெளிநாட்டு மானியங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் குறித்த தொகையினால் குறைவாகவும், செயற்திட்ட மானியக் கணக்கின் மீதி மற்றும் வருடத்திற்கான பற்றாக்குறை குறித்த தொகையினால் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது. | செயற்திட்டத்துடன் தொடர்புடைய ரூபா 125,000 பெறுமதியான செலவுகள் தொடர்பில் மேலும் பரிசோதனை செய்து, தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஏ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதிக்கூற்றுகளின்படி சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பான பிடிகாசுத் தொகை (Retention) ரூபா 527,461 ஆக இருந்ததுடன், 2020 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட்ட ரூபா | இது தொடர்பில் தேவையான கணக்கீட்டுத் திருத்தத்தை 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகள் மூலம் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் | கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு அமைவாக, கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | 151,856 தொகையும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக, நடைமுறைப் பொறுப்புக்கள் குறித்த தொகையினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தன. | தெரிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கில் பதிவு செய்வதுடன், நிதிக்கூற்றுகளை சரியாகத் தயாரிக்க வேண்டும். |
| (ஐ) | சோமா ஜயகொடி நூலகத்திற்கு 2019 ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற தளபாடங்கள் மற்றும் நூலகப் புத்தகத் தொகுப்பின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கில் பதிவு செய்யப்படாததன் காரணமாக, நிலையான சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் குறித்த பெறுமதிகளினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | சோமா ஜயகொடி நூலகத்திற்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற நூலகப் புத்தகங்களின் பெறுமதியை மதிப்பிடும் பணி நிறைவடைந்துள்ளதுடன், தளபாடங்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கில் பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அனைத்து நன்கொடைகளும் மதிப்பிடப்பட்டு கணக்கில் பதிவு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி | தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் மீதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| இருப்பு | 9,889,852 | 7,859,921 | 2,029,931 | இது தொடர்பில் விடயங்களை ஆராய்ந்து, தேவையான கணக்கீட்டுத் திருத்தத்தை 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகள் மூலம் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பௌதீக ரீதியாக கணக்கிடப்பட்ட இருப்பை, இருப்பு அறிக்கைகளுடன் ஒப்பிட்டு, வேறுபாடுகளுக்கான காரணங்களை இனங்கண்டு தேவையான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | (i) நிதிப் பிரமாணம் 571 | வைப்புக் கணக்கொன்றில் நிச்சயமற்ற நிலையில் வைத்திருக்கும் பணம் காலாவதியான வைப்புகளாகக் கருதப்படுவதற்கு இடமளிக்காமல், சந்தர்ப்பத்திற்கேற்ப குறித்த கணக்கிற்கோ அல்லது வருமானத்திற்கோ செலவு வைக்கப்பட வேண்டும் அல்லது கூடிய விரைவில் மீளச் செலுத்தப்பட வேண்டும். எனினும், 2 வருடங்களுக்கும் மேலாக நிலுவையில் இருந்த, மொத்தப் பெறுமதி ரூபா 394,961 ஆக அமைந்த தக்கவைப்புத் தொகைகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்றும் தீர்வு செய்யப்படாமல் இருந்தன. | 2 வருடங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள தக்கவைப்புத் தொகைகளைத் தீர்வு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணங்களுக்கு அமைவாக, வைப்புகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) நிதிப் பிரமாணம் 756, 757 | 2012 ஆம் ஆண்டு முதல் 2025 நவெம்பர் 30 ஆம் திகதி வரை சபையின் நிலையான சொத்துக்கள் தொடர்பில் பௌதீக ரீதியான சரிபார்ப்பு மேற்கொள்ளப்படவில்லை. | சபையின் மெய்மையாய்வுப் பணிகள் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை வருடாந்தம் சரிபார்த்து, சொத்துக்களின் பௌதீக இருப்பை உறுதிப்படுத்த வேண்டும். |
| | (iii) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதி ஒழுங்குவிதி 371(5) | கொடுக்கப்பட்ட பணிகளை நிறைவு செய்ததிலிருந்து 10 நாட்களுக்குள் இடைக்கால முற்பணங்கள் தீர்வு செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், 2011 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு இறுதி வரை வழங்கப்பட்ட மொத்தம் ரூபா 155,486 பெறுமதியான 19 இடைக்கால முற்பணங்கள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்றும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தன. | இந்த முற்பணத் தொகைகளைத் தீர்வு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணங்களுக்கு அமைவாக, இடைக்கால முற்பணங்களைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய இலக்கம் 842 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | ரூபா 650,464,392 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு முறையாகப் பேணப்படவில்லை. | சபையின் நிலையான சொத்துப் பதிவேட்டை சரியாகத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக, நிலையான சொத்துப் பதிவேட்டை முறையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2021 நவெம்பர் 16 ஆம் திகதிய | கணக்காண்டு நிறைவடைந்த 60 நாட்களுக்குள் அதன் | 2022 ஆம் ஆண்டிற்கான | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பந்தி | நிதிக்கூற்றுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற போதிலும், கணக்காண்டு நிறைவடைந்து 2 வருடங்கள் 7 மாதங்களுக்குப் பின்னர் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுகள் 2025.09.10 அன்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டு மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான இறுதிக் கணக்குகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் நிதிக்கூற்றுகளை உரிய திகதியில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அமைவாக, நிதிக்கூற்றுகளை கணக்காய்விற்காக சமர்ப்பிக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 16,959,876 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு ஒத்ததாக முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 20,774,680 ஆகும். அதற்கமைய, நிதி விளைவுகளில் ரூபா 3,814,804 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 3,780,000 ஆன ஆதன வாடகை வருமானம் பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் கையகப்படுத்தல் பதிவேடாகப் பயன்படுத்துவதற்காக, 2015 ஆம் ஆண்டு முதல் கிடைக்கப்பெற்ற புத்தகங்களை உள்ளடக்கி KOHA எனப்படும் தரவுத்தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அதில் 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் மற்றும் ஏனைய வழிகளில் கிடைக்கப்பெற்ற புத்தகங்களின் பெறுமதி மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தது. பெறுமதி குறிப்பிடப்படாத 144,766 புத்தகங்கள் குறித்த தரவுத்தொகுதியில் உள்ளிடப்பட்டிருந்ததுடன், | KOHA நூலக முகாமைத்துவ மென்பொருள் தொகுதியில் இதுவரை இனங்காணப்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தற்போது விலை குறிப்பிடப்படாத வெளியீடுகளுக்கான விலையை நிர்ணயிப்பதற்காக விலைக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அது 2022 ஒக்டோபர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | KOHA தரவுத்தொகுதியில் அனைத்து தரவுகளையும் சரியாக உள்ளிட்டு, அதனைப் நாளதுவரையாக்கப்பட்ட நிலையில் பேண வேண்டும். |

| | | |
|---|---|---|
| அத்தரவுத்தொகுதியின்படி 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று புத்தகத் தொகையிருப்பின் பெறுமதி ரூபா 77,337,196 ஆக இருந்தது. எவ்வாறாயினும், சபைக்குச் சொந்தமான அனைத்து புத்தகங்களையும் பெறுமதிகளுடன் தரவுத்தொகுதியில் பராமரிக்காததன் காரணமாக, குறித்த தரவுத்தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. | | |

### 3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஜனவரி 01 ஆம் திகதியன்று பயன்படுத்தப்படாத ரூபா 8,719,917 பெறுமதியான மூலதன மானிய மீதியொன்று காணப்பட்ட போதிலும், 2022 ஆம் ஆண்டில் ரூபா 3,250,000 பெறுமதியான மூலதன மானியங்கள் பெறப்பட்டிருந்ததுடன், குறித்த மானியங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தாததன் காரணமாக, 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மேலும் ரூபா 5,888,356 பெறுமதியான மீதியொன்று எஞ்சியிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக, உரிய நடைமுறைக்கு அமைவாக கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மூலதன மானியங்களை வினைத்திறனுடனும் நோக்கத்துடனும் சிக்கனமாகவும் பயன்படுத்த வேண்டும். |